2. அமைச்சரின் அறிக்கை.

ஓர் துணைக் கேள்விக்கு தான் அளித்த விடையைத் திருத்தி மாண்புமிகு திரு. க. அன்பழகன் அளித்த அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி 646-க்குக் கொடுத்த விடைக்குத் திருத்தம் கொடுப்பார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று காலை கேள்வி 646-க்கு துணைக் கேள்விகளுக்கு பதில் அளிக்கிறபோது திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கிள்ளியூர் ஒன்றியத்தில் தொலையாவெட்டை பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படுமா என்று கேட்டதற்கு—கிள்ளியூர் ஒன்றியத்தில் தொலையாவெட்டையில் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது என்று நான் சொன்னேன். அது சரியல்ல. கிள்ளியூர் ஒன்றியத்தில் கருங்கல் என்ற ஊரில்தான் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

3. உரிமைப் பிரச்னை

இந்தியப் பிரதமர் கன்னியாகுமரி அம்மனுக்கு வைர நெக்லஸ் அளித்ததாக மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் அவர்கள் அளித்த விளக்கம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்ததாக, திரு கே. டி. கே. தங்கமணி, திரு ஜே. ஜேம்ஸ், திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. எம். சுரேந்திரன், திரு. கோவை செழியன் ஆகிய மாண்புமிகு உறுப்பினர்கள் கன்னியாகுமரி அம்மனுக்கு இந்தியப் பிரதமர் ஒரு வைர நெக்லஸ் அளித்தார்கள் என்று மாண்புமிகு திரு. கண்ணப்பன் கொடுத்த விளக்கத்தையொட்டி உரிமைப் பிரச்னை எழுப்பியிருக்கிறார்கள். அது எப்படி உரிமை மீறிய நிகழ்ச்சியாகும் என்பதை விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI: With your permission **Mr.** Speaker Sir, I would like to read the notice that I have given to you

"I wish to raise the following matter of privilege under Rule 184 today in the House:

Yesterday (10th April 1975) while answering supplementaries to a question touching diamond crown to the Deity at Palni, the Minister for Hindu Religious Endowments, Thiru Kannappan volunteered and stated—